



# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி





மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், ஆகஸ்ட் 26, 2026 | இதழ் 135

## சென்னையில் 130 புதிய ஏசி மின்சார பேருந்துகள் சேவையை தொடங்கி வைத்தார் முதல்வர் விஜய்

சென்னை, 26 ஆகஸ்ட் 2026: சென்னையில் புதிதாக 130 தாழ்தள குளிர் சாதன மின்சாரப் பேருந்துகள் சேவையை முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார். சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் நடைபெற்ற தொடக்க நிகழ்வில் கலந்து கொண்ட முதல்வர் விஜய், மொத்தம் 250 புதிய பேருந்துகளின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்துக்காக ரூ. 134.50 கோடியில் வாங்கப்பட்ட 130 தாழ்தள குளிர்சாதன மின்சாரப் பேருந்துகளை முதல்வர் விஜய் கொடியசைத்து தொடக்கி வைத்த பின், பேருந்தில் ஏறி ஆய்வு செய்தார். 130 புதிய ஏ.சி. மின்சார பேருந்துகள் ஆலந்தூர், பெரம்பூர், ஆவடி, சென்ட்ரல், பாடிய நல்லூர், கேகே நகர், அய்யப்பன்தாங்கள் உள்ளிட்ட பணிமனைகளில் இருந்து இயக்கப்படுகிறது.





இதேபோல், சேலம், விழுப்புரம், மதுரை, கோவை, நெல்லை ஆகிய மாவட்டங்களின் பயன்பாட்டிற்காக ரூ. 55.58 கோடியில் வாங்கப்பட்ட 120 புதிய சாதாரண பேருந்துகளின் சேவையையும் சேர்த்து மொத்தம் 250 புதிய பேருந்துகளின் சேவைகளை தொடக்கி வைக்கப்பட்டது.

இந்த தொடக்க நிகழ்வில், போக்குவரத்துத்துறை அமைச்சர் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலர் சாய்குமார், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## புதிய பொருளாதார தடைகளை தீவிரப்படுத்தினால் கச்சா எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்துவோம்: அமெரிக்காவுக்கு ஈரான் பதிலடி எச்சரிக்கை

சென்னை 26, ஆகஸ்ட் 2026: அமெரிக்க அதிபர் டிரம்ப் தலைமையிலான நிர்வாகம் புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நிலையில், தகுந்த பதிலடி கொடுக்க முழுமையாக தயாராக இருப்பதாக ஈரான் எச்சரித்துள்ளது. மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் நீடித்து வரும் சூழலில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் ஈரான் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தி 6 மாதங்கள் கடந்துவிட்டன. இந்த போரினால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள் விலை உயர்ந்துள்ள நிலையில், ஈரானை கட்டுப்படுத்த பொருளாதார அழுத்தத்தை தீவிரப்படுத்தும் நடவடிக்கையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகம் இறங்கியுள்ளது.



இதன் ஒரு பகுதியாக, ஈரானின் பொருளாதார உயிர்நாடியை முடக்கும் நோக்கில் அந்நாட்டின் 60 தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் வர்த்தக கப்பல்கள் மீது புதிய பொருளாதாரத் தடைகளை அமெரிக்க நிதித்துறை அமைச்சர் ஸ்காட் பெசன்ட் அறிவித்தார். மேலும் ஈரானுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்யும் நாடுகள் சர்வதேச டாலர் பரிவர்த்தனை முறையில் இருந்து நீக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

அமெரிக்காவின் இந்த புதிய பொருளாதார நடவடிக்கைக்கு ஈரான் அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், ராணுவ ரீதியாகவும் சர்வதேச சந்தைக்கான கச்சா எண்ணெய் ஏற்றுமதியை குறைத்தும் நேரடி பதிலடி கொடுக்கப் போவதாக எச்சரித்துள்ளது. இதுகுறித்து ஈரான் பொருளாதார அமைச்சர் அலி மதனிசாதே அளித்த பேட்டியில், 'அமெரிக்காவின் பொருளாதார தடைகளை எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம். சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அமெரிக்காவின் இந்த உத்தரவை ஏற்கவில்லை. எதிரிகள் பொருளாதார தீவிரவாத தாக்குதலை நடத்த முற்பட்டால், எங்களது தற்காப்பு நடவடிக்கை இனி வெறும் தற்காப்பாக மட்டும் இருக்காது; நாங்கள் நடத்தும் கடுமையான எதிர்த் தாக்குதலுக்கு எதிரிகள் காத்திருக்க வேண்டும்' என்று ஆவேசமாக தெரிவித்தார்.






## "இந்தியாவின் உரப் பிரச்சினையைத் தீர்க்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்": ரஷ்ய அதிபர் புதின் உறுதி

சென்னை, 26 ஆகஸ்ட் 2026: ''இந்தியாவின் உரப் பிரச்சினையைத் தீர்க்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்; வர்த்தகம் மற்றும் எரிசக்தித் துறையில் உறவுகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறோம் " என ரஷ்ய அதிபர் புதின் தெரிவித்தார்.



அடுத்த மாதம் ரஷ்ய அதிபர் புதின் இந்தியாவுக்கு வருகை தருகிறார். தற்போது ரஷ்யா சென்றுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அந்நாட்டு அதிபர் புதினை சந்தித்து, பிரதமர் மோடியின் தனிப்பட்ட செய்தியை அவரிடம் வழங்கினார்.

இந்தச் சந்திப்பில், இந்தியாவுக்கான உர விநியோகத்தைத் தொடர புதின் உறுதியளித்தார். வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் இந்தியா - ரஷ்யா இடையே உறவை வலுப்படுத்துவது குறித்தும் ஆலாசனை நடத்தினர்.

ரஷ்ய அதிபர் புதின் செப்டம்பர் 12ம் தேதி பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்காக இந்தியாவுக்கு வருவதற்கு முன்னதாக ஆகஸ்ட் 31ம் தேதி முதல் செப்டம்பர் 1ம் தேதி வரை கிர்கிஸ்தானில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டின் இடையே மோடியும், புதினும் சந்திப்பார்கள்.

இந்நிலையில் ரஷ்ய அதிபர் புதின் கூறியதாவது:

வளர்ந்து வரும் வர்த்தகம் மற்றும் எரிசக்தி துறையில் உறவுகள் குறித்தும், உரங்கள் பிரச்சினை குறித்தும் கவனம் செலுத்தியதோடு, இந்திய விவசாயிகளுக்கும் நாட்டின் விவசாயத் துறைக்கும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ரஷ்யா தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது.

அணுசக்தி, உயர் தொழில்நுட்பம்

ரஷ்யா தனது ஏற்றுமதியை விரிவுபடுத்தி வருகிறது, மேலும் அதைத் தொடரவும் தயாராக உள்ளது. அணுசக்தி, உயர் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது; கடந்த ஆண்டு ஏற்பட்ட சிறிய சரிவுக்குப் பிறகு, வர்த்தகம் மீண்டும் அதிகரித்து வருகிறது.

ரஷ்யாஸ்ரீஇந்தியா உறவுகளின் வளர்ச்சியை உன்னிப்பாகக் கண்காணிப்பதில் பிரதமர் மோடி அர்ப்பணிப்புடன் இருக்கிறார். இதற்கான பெருமை பெரும்பாலும் அவருக்கே சேரும். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் அவரைச் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன்.

இவ்வாறு ரஷ்ய அதிபர் புதின் கூறியுள்ளார்.

ரஷ்ய பயணம் குறித்து அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதாவது:

இந்தியா - ரஷ்யா இடையிலான ஆணைய கூட்டம் நேற்று நடைபெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு வளர்ந்துள்ளது. வர்த்தகம், எரிசக்தி, உரம், அணுசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது.

வரும் 31ல் கிரிகிஸ்தானில் துவங்க உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி அதிபர் புதினை சந்திக்க உள்ளார். அதன்பின் நடக்வுள்ள, 'பிரிக்ஸ்' உச்சி மாநாட்டுக்காக டெல்லிக்கு வரவேற்றுள்ளார். தொடர்ந்து, இரு தரப்பு வருடாந்திர உச்சி மாநாட்டையும் நடத்த திட்டமிட்டு வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து, ரஷிய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லவ்ரோவை ஜெய்சங்கர் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது இருநாட்டு உறவு, வர்த்தகம், சர்வதேச அரசியல் சூழ்நிலை, உக்ரைன் போர் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

## மண்டல கிராமப்புற வங்கிகளின் நிகர லாபம் ரூ.10,176 கோடியாக அதிகரித்துச் சாதனைப் படைத்துள்ளது

சென்னை 26, ஆகஸ்ட் 2026: மண்டல கிராமப்புற வங்கிகளின் நிகர லாபம் ரூ.10,176 கோடியாக அதிகரித்துச் சாதனைப் படைத்துள்ளது. 2025-26-ம் நிதியாண்டில் அனைத்து மண்டல கிராமப்புற வங்கிகளும் சிறப்பாகச் செயல்பட்டதாக நிதித் துறை கூறியுள்ளது.

தற்போது 26 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் உள்ள 700 மாவட்டங்களைச் சேர்ந்த 22,273 கிளைகள் மூலம் 28 மண்டல கிராமப்புற வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த வங்கிகளின் மொத்த வர்த்தகம் கடந்த நிதியாண்டில் ரூ.13.5 லட்சம் கோடியை கடந்துள்ளது.

இது சில பொதுத் துறை வங்கிகளின் வணிகத்தைக் காட்டிலும் கூடுதலாகும். 2024-25-ம் நிதியாண்டில் ரூ.6,820 கோடியாக இருந்த ஒருங்கிணைந்த நிகர லாபத்துடன் சூப்பிடுகையில் 2025-26-ம் நிதியாண்டில் மண்டல கிராமப்புற வங்கிகளின் நிகர லாபம் ரூ. 10,176 கோடியாக அதிகரித்துள்ளது.

இந்த வங்கிகளின் மொத்த வாராக்கடன், நிகர வாராக்கடன் ஆகிய இரண்டும் முறையே 5.3 சதவீதம், 2.1 சதவீதம் என்ற குறைந்த அளவில் இருந்தன.

2025-26-ம் நிதியாண்டில் 54.98 லட்சத்திற்கும் அதிகமான புதிய பிரதமரின் ஜன்-தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதன் மூலம் நிதி சேவைகளை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மண்டல கிராமப்புற வங்கிகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

இந்த வங்கிகளின் கடன் வைப்பு விகிதம் 2025-26-ம் நியீயாண்டில் 75.2 சதவீதம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சத்தை எட்டி உள்ளது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
புதன்,
ஆகஸ்ட் 26, 2026

## தமிழக சிறு,குறு மற்றும் நடுத்த நிறுவனங்களின் உள்நாட்டு, உலகளாவிய சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்த வால்மார்ட் விருத்தி - கைடன்ஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம்




சென்னை, 26 ஆகஸ்ட் 2026: வால்மார்ட் விருத்தி, ஐடியாஸ் டு இம்பேக்ட் பவுண்டேஷனுடன் இணைந்து, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகத்துடன் (கைடன்ஸ்) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. திறன் மேம்பாடு, டிஜிட்டல் மாற்றம் மற்றும் உள்நாட்டு, சர்வதேச சந்தைகளுக்கான அணுகல் ஆகியவற்றின் மூலம் மாநிலத்தின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் அமைப்பை இந்தக் கூட்டாண்மை வலுப்படுத்தும்.

சென்னையில் நடைபெற்ற 'வெற்றி தமிழ்நாடு முதலீட்டு மாநாட்டில்' முறைப்படுத்தப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், 2028ஆம் ஆண்டிற்குள் இந்தியா முழுவதும் உள்ள 1 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கும் வால்மார்ட் விருத்தியின் இலக்கை நோக்கிய மற்றொரு பயணம் இதுவாகும்.

இந்தக் கூட்டாண்மையின் மூலம், தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்த நிறுவனங்கள் வால்மார்ட் விருத்தியின் இலவசப் பயிற்சி, தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் வணிகக் கருவிகளைப் பெற்று, வலுவான மற்றும் டிஜிட்டல் திறன் கொண்ட வணிகங்களை உருவாக்க முடியும்.

மேலும், பிளிப்கார்ட் மற்றும் வால்மார்ட் மார்க்கெட்பிளேஸ் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் திறன்களை வளர்த்து, தேசிய மற்றும் சர்வதேச விநியோகச் சங்கிலிகளுக்கான வழிகளையும் இந்த ஒப்பந்தம் உருவாக்கும்.

கைடன்ஸ் அமைப்பு, தனது தற்போதைய திட்டங்கள், மாவட்ட தொழில் மையங்கள் மற்றும் பிற அரசு அமைப்புகளின் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைச் சென்றடையவும் ஒருங்கிணைக்கவும் உதவும். மேலும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற தகவல் தொடர்புத் தளங்கள் வாயிலாக வால்மார்ட் விருத்தியின் திட்டங்கள், முயற்சிகள் மற்றும் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இது ஆதரவளிக்கும்.

இந்தக் கூட்டாண்மை, கைடன்ஸ் அமைப்பின் விரிவான தொழில் துறைத் தொடர்புகள் மற்றும் வழிகாட்டும் திறன்களையும், வால்மார்ட் விருத்தியின் சப்ளையர் மேம்பாட்டு நிபுணத்துவத்தையும் ஒன்றிணைக்கிறது. பயிற்சி வகுப்புகள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவை வணிகத் தயார்நிலையை வலுப்படுத்துதல், டிஜிட்டல் மாற்றத்தை வேகப்படுத்துதல் மற்றும் உள்நாட்டு, சர்வதேச சந்தைகளில் தமிழ்நாட்டுத் தொழில் முனைவோரின் பங்களிப்பை அதிகப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

வால்மார்ட் மார்க்கெட்பிளேஸின் எல்லை தாண்டிய வர்த்தகப் பிரிவின் இந்தியத் தலைவர் ஆஷின் மேத்யூ கூறுகையில், "இந்தியாவைத் தாண்டியும் வாடிக்கையாளர்களைச் சென்றடையும் திறன் கொண்ட தொழில் முனைவோர் மற்றும் உற்பத்தியாளர்களின் வலுவான அடித்தளத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது. வால்மார்ட் மார்க்கெட்பிளேஸ் மூலம், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்கள் ஏற்றுமதித் திறன்களை வலுப்படுத்தவும், எல்லை தாண்டிய வர்த்தகத்தை எளிதாக்கவும், சர்வதேச சந்தைகளில் உள்ள வாடிக்கையாளர்களுடன் இணையவும் நாங்கள் உதவ விரும்புகிறோம். மேலும் பல உள்ளூர் வணிகங்கள் தங்கள் ஏற்றுமதி லட்சியங்களை நிலையான வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக மாற்ற எங்களால் உதவ முடியும்," என்று கூறினார்.

## 'இன்வெஸ்கோ இந்தியா பார்மா அண்ட் ஹெல்த்கேர் ஃபண்ட்' திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது இன்வெஸ்கோ மியூச்சுவல் ஃபண்ட்!

சென்னை 26, ஆகஸ்ட் 2026: இன்வெஸ்கோ மியூச்சுவல் ஃபண்ட், 'இன்வெஸ்கோ இந்தியா பார்மா அண்ட் ஹெல்த்கேர் ஃபண்ட்' (மருந்தியல், சுகாதாரம் மற்றும் அது சார்ந்த துறைகளில் முதலீடு செய்யும் திறந்தநிலை ஈக்விட்டி திட்டம்) என்ற புதிய திட்டத்தின் அறிமுகத்தை இன்று அறிவித்துள்ளது.

சாதகமான மக்கள் தொகை அமைப்பு, விரிவடைந்து வரும் மருத்துவ சேவைகள் அணுகல், அதிகரித்து வரும் மருத்துவக் காப்பீட்டு பயன்பாடு, சர்வதேச அளவில் வளர்ந்து வரும் மருந்தியல் துறையின் தலைமைத்துவம், சுகாதாரம் மற்றும் ஆயுள் அறிவியல் (லைஃப் சயின்ஸஸ்) துறைகளில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள் ஆகியவற்றால் மேம்பட்டு வரும் இந்தியாவின் சுகாதாரத் துறை சூழலை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதை இந்த நிதி நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் மருந்தியல் நிறுவனங்கள், மருத்துவமனைகள், நோய்க்கண்டறிதல் மையங்கள் (டயக்னோஸ்டிக்ஸ்), ஒப்பந்த வளர்ச்சி மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் (சிடிஎம்ஓ), ஒப்பந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் (சிஆர்ஓ), மருத்துவ உபகரணங்கள், சுகாதாரச் சேவைகள், காப்பீடு மற்றும் பிற சார்ந்த சுகாதாரத் துறைகளில் முதலீடு செய்யும்.

அளவு, திறமையான மனிதவளம், உற்பத்தித் திறன் மற்றும் வளர்ந்து வரும் கண்டுபிடிப்புத் திறன் ஆகியவற்றின் பலத்தால், சர்வதேச சுகாதார அமைப்பில் இந்தியா இன்று ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. அதிகரித்து வரும் சுகாதாரச் செலவினங்கள், முதியோர் மக்கள் தொகை உயர்வு, அதிகரித்து வரும் வாழ்வியல் நோய்கள், விரிவடையும் மருத்துவக் காப்பீட்டு வரம்பு, உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் உலகளாவிய அவுட்சோர்சிங் போக்குகள் போன்ற கட்டமைப்பு காரணிகள், சுகாதாரத் துறையின் மதிப்பீட்டுச் சங்கிலி (வேல்யூ செயின்) முழுவதும் நீண்டகால வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிதியானது திரு. ஆதித்யா கேமானி அவர்களால் நிர்வகிக்கப்படும், மேலும் பிஎஸ்இ ஹெல்த்கேர் டிஆர்ஐ இதன் அளவுகோலாக (பென்ச்மார்க்) இருக்கும்.

இந்த அறிமுக நிகழ்ச்சியில் பேசிய இன்வெஸ்கோ மியூச்சுவல் ஃபண்டின் ஈக்விட்டி பிரிவு தலைவரும் ஃபண்ட் மேனேஜருமான திரு. ஆதித்யா கேமானி, "இந்தியாவின் சுகாதாரத் துறை ஒரு கட்டமைப்பு ரீதியான மாற்றத்தைக் கண்டு வருகிறது. சாதகமான மக்கள் தொகை அமைப்பு மற்றும் அதிகரித்து வரும் வாங்கும் திறன் காரணமாக, உள்நாட்டில் சுகாதார சேவைகளுக்கான பயன்பாடு அதிகரிப்பது மட்டுமின்றி, சர்வதேச அளவில் மருந்தியல் மற்றும் சுகாதாரத் துறை கண்டுபிடிப்புகளின் மையமாகவும் இந்தியா தன் நிலையை வலுப்படுத்தி வருகிறது. இந்த பல ஆண்டு வளர்ச்சிச் சுழற்சியால் பலனடையக்கூடிய உள்நாட்டு மருந்தியல், மருத்துவமனைகள், நோய்க் கண்டறிதல் மையங்கள், சிடிஎம்ஓ-க்கள் மற்றும் உருவாகி வரும் பிற சுகாதாரப் பிரிவுகளில் பல ஈர்க்கக்கூடிய வாய்ப்புகளை நாங்கள் காண்கிறோம்.

சுகாதாரத் துறை சூழலில் நீடித்த போட்டி நன்மைகளும், வலுவான வளர்ச்சி சாத்தியக்கூறுகளும் கொண்ட தரமான நிறுவனங்களைக் கண்டறிவதில் எங்களது முதலீட்டு அணுகுமுறை கவனம் செலுத்தும்" என்று கூறினார்.

## உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் பாதுகாப்புப் பணிக்கான திறன் கொண்ட நிபுன் கப்பல் இந்தியக் கடற்படையுடன் இணைப்பதற்குக் தயார் நிலையில் உள்ளது



சென்னை, 26 ஆகஸ்ட் 2026: ஆழ்கடல் பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளைத் திறம்பட மேற்கொள்ள ஏதுவாக நிஸ்தார் வகையைச் சேர்ந்த முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இரண்டாவது கப்பலான நிபுன், இம்மாதம் 31-ம் தேதி இந்தியக் கடற்படையுடன் இணைக்கப்பட உள்ளது. மும்பையில் உள்ள கடற்படைத் தளத்தில் இதற்கான நிகழ்ச்சி நடைபெறும். இந்தக் கப்பல் ஆழ்கடல் பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவிடும். இது கப்பல் கட்டுமானம் முதல் செயல்பாட்டுச் சேவை வரை கடற்படைப் பயணத்தின் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதைக் குறிக்கிறது.

விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துஸ்தான் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட நிபுன் கப்பல் பாதுகாப்புத் துறை சார்ந்த கப்பல் கட்டுமானப் பணிகளில் இந்தியா தன்னிறைவு அடைவதற்கான முயற்சிகளில் குறிப்பிடத்தக்க நிலை எட்டப்பட்டுள்ளதைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்தப் போர் கப்பலில் தேவையான உபகரணங்களைப் பொருத்தும் பணிகள், சோதனைகள் நிறைவடைந்துள்ளதை அடுத்து கடந்த ஜூலை 30-ம் தேதி அன்று இந்தக் கப்பல் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

நிபுன் கப்பல் நீருக்கடியில் பல்வேறு வகையான செயல்பாடுகளுக்கு உதவிடும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கப்பலாகும். நீருக்கடியில் செயல்படும் திறன் கொண்ட இந்தக் கப்பல் கடல் பகுதியில் சவாலான சூழல்களில் பணியாற்றும் கடற்படை வீரர்களுக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் பருவமழைக்கு முன்பே பன்றிக்காய்ச்சல் எனப்படும் ஹெச்1 வகை காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் மருத்துவமனைகளில் கூட்டம் அதிகரிப்பு




சென்னை, 26 ஆகஸ்ட் 2026: தமிழ்நாட்டில் பருவமழைக்கு முன்பே பன்றிக்காய்ச்சல் எனப்படும் ஹெச்1 வகை காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் மருத்துவமனைகளில் கூட்டம் அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரியில் 19 ஆக இருந்த பாதிப்பு தற்போது 339 ஆக உயர்ந்துள்ளது. லேசான சளி, காய்ச்சல், இருமல், தொண்டை வலி போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பன்றிக் காய்ச்சல் சோதனை (பி1ழி1) என்பது உங்கள் உடலில் பன்றிக் காய்ச்சலைக் கண்டறிய உதவும் தொடர்ச்சியான நோயறிதல் சோதனைகள் ஆகும். ஹெச்1என்1 என்பது "ஹெமகுளுட்டினின் வகை 1 மற்றும் நியூராமினிடேஸ் வகை 1" என்பதைக் குறிக்கிறது, இது ஹெச்1என்1 இன்ஃப்ளூயன்ஸா வைரஸின் மேற்பரப்பில் காணப்படும் குறிப்பிட்ட புரதங்களைக் குறிப்பிடுகிறது. ஹெச்1என்1 இன்ஃப்ளூயன்ஸா அல்லது பன்றிக் காய்ச்சல் என்பது பன்றிகளிடமிருந்து தோன்றிய ஒரு வைரஸ் ஆகும், இது மனிதர்களையும் தொற்றிக் கொள்ளும் வகையில் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது.

பன்றிக் காய்ச்சலுக்கான பரிசோதனை முடிவுகள் நேர்மறை அல்லது எதிர்மறையாக இருக்கும். பன்றிக் காய்ச்சல் (ஹெச்1என்1) பரிசோதனையில் உங்கள் முடிவு எதிர்மறையாக வந்தால், உங்களுக்கு இந்த நோய் இல்லை, ஆனால் சாதாரண பருவகால காய்ச்சல் இருக்கலாம் என்று அர்த்தம். இருப்பினும், உங்கள் முடிவு நேர்மறையாக வந்தால், நீங்கள் ஹெச்1என்1 வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்றும் உங்களுக்கு சிகிச்சை தேவை என்றும் அர்த்தம்.

இருமல், தொண்டை வலி மூக்கடைப்பு அல்லது மூக்கில் நீர் வடிதல் சோர்வு மற்றும் தலை வலி அறிகுறிகள் இருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் தும்மும் போது இருமும்போது வெளிவரும் நீர்த்துளிகள் மூலம் மற்றவர்களுக்குப் பரவுகிறது. கிருமி தொற்றுய் பொருட்களைத் தொட்டுவிட்டு கண்களையோ, மூக்கையோ தொடும் போதும் பரவக்கூடும். காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்து வீட்டில் ஓய்வெடுக்கவும். கைகளைச் சோப்பு போட்டு அடிக்கடி சுத்தமாகக் கழுவவும். ஜுராய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## அதிகரிக்கும் மெமரி செலவு காரணமாக கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா, இசட் ஃபோல்ட்8 ஆகியவற்றின் விலைகள் உயரக்கூடும்

கோயம்புத்தூர் 26, ஆகஸ்ட் 2026: இந்தியாவின் முன்னணி சில்லறை விற்பனையாளர்களின் கூற்றுப்படி, சாம்சங் புதிய ஃபோல்டபிள் ஸ்மார்ட்போன்களான கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா, கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 மற்றும் கேலக்ஸி இசட் ஃப்ளிப்8 ஆகியவைகளின் விலைகள் இந்தியாவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. ரூ. 1.25 லட்சம் முதல் ரூ. 2.6 லட்சம் வரை விலையுள்ள இந்த புதிய சாம்சங் ஃபோல்டபிள்கள், ஹிஞ்ச் டிசைன், டிஸ்ப்ளே, நீடித்துழைக்கும் தன்மை மற்றும் பெர்ஃபார்மன்ஸ் ஆகியவற்றில் புரட்சிகரமான இன்ஜினியரிங்குடன் கூடிய கேலக்ஸி ஏஐ-யை இணைத்து, இதுவரை இல்லாத மிகச் சிறந்த ஃபோல்டபிள் அனுபவத்தை வழங்குகின்றன.

அன்ஃபோல்ட் செய்யப்பட்ட நிலையில் 4.1எம்எம் தடிமன் கொண்ட கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா, சாம்சங்கின் இதுவரை இல்லாத மிக மெல்லிய கேலக்ஸி இசட் ஃபோல்ட் ஆகும். மற்றொருபுறம், கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 வெறும் 201 கிராம்கள் மட்டுமே எடையுள்ளதாக இருக்கிறது, இது சாம்சங் - இன் இதுவரை இல்லாத மிக குறைந்த எடையுள்ள ஃபோல்ட் ஆகும்.

சாம்சங் இந்தியா நிறுவனத்தின் கூற்றுப்படி, கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா, கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 மற்றும் கேலக்ஸி இசட் ஃப்ளிப்8 ஆகியவை இந்தியாவில் சாதனை அளவிலான ப்ரீ-ஆர்டர்களைப் பெற்றுள்ளன, இந்த ஸ்மார்ட்போன்கள் அறிமுகப்படுத்தப்பட்ட வெறும் 72 மணி நேரத்திற்குள் சுமார் 2.71 லட்சம் வாடிக்கையாளர்கள் ப்ரீ-ஆர்டர் செய்துள்ளனர். இந்த சாதனைகளின் விற்பனை இந்த மாதத்தின் தொடக்கத்தில் மிக தீவிரமாகத் தொடங்கியது, ஆனால் ஸ்மார்ட்போன்களுக்கு மிக முக்கியமான அங்கமான மெமரி சிப்களுக்கான முன்னெப்போதும் இல்லாத தேவை காரணமாக விலை உயர்வு ஏற்படக்கூடும் என சில்லறை விற்பனையாளர்கள் அஞ்சுகின்றனர்.

வாடிக்கையாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஸ்மார்ட்போன்களின் கூடுதல் செலவை சாம்சங் பெருமளவில் தானே ஏற்றுக்கொள்வதாக கடந்த மாதம் தெரிவித்தது. இந்தியாவில் கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா, கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 மற்றும் கேலக்ஸி இசட் ஃப்ளிப்8 வாங்குபவர்களுக்காக நீண்ட கால நோ-காஸ்ட் இஎம்ஐ திட்டத்தையும் இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய கேலக்ஸி ஃபோல்டபிள்களின் அறிமுக விழாவில் லண்டனில் பேசிய சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஜேபி பார்க் அவர்கள், “போட்டி நிறுவனங்கள் எவ்வளவு விலையை உயர்த்தியுள்ளன என்பதை நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், சாம்சங்கின் விலை உயர்வு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது, ஏனெனில் நாங்களே அந்த செலவை ஏற்றுக்கொண்டு வருகிறோம். நாங்கள் சந்தைப் பங்கைப் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவோ அல்லது சந்தைப் பங்கை உயர்த்த வேண்டும் என்பதற்காகவோ இதைச் செய்யவில்லை, சிறந்த சாதனங்களை வழங்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட ஒரு நிறுவனமாக, 2026-இல் நாங்கள் ஏற்றுக்கொள்ளும் இழப்பு மிகப்பெரியது” என்று கூறினார்.

சாம்சங் நிறுவனம் இந்தியாவில் தனது புதிய கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 அல்ட்ரா, கேலக்ஸி இசட் ஃபோல்ட்8 மற்றும் கேலக்ஸி இசட் ஃப்ளிப்8 ஸ்மார்ட்போன்களின் விலையை உயர்த்தினால், அது தங்களுக்கு ஆச்சரியமளிக்காது என்று பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர்.

## அமெரிக்காவின் பொருளாதார தடை; ஈரான் கரன்சி மதிப்பு வரலாறு காணாத சரிவு: 1 டாலர்=17 கோடி ரியால்

சென்னை 26, ஆகஸ்ட் 2026: அமெரிக்கா-ஈரான் இடையேயான போர் நிறுத்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த நிலையில், இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாவதில் சிக்கல் நீடித்து வருகிறது.

இதற்கிடையே, ஈரான் மீது புதிய பொருளாதார தடைகளை விதிக்கப் போவதாக அதிபர் டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். ஈரானுக்கு எந்த வகையிலும் உதவி செய்யும் நாடுகள் மீது தடை விதிப்பது உட்பட இதுவரை இல்லாத அளவுக்கு கடுமையான பொருளாதார தடைகளை டிரம்ப் விதிக்க திட்டமிட்டுள்ளார். ஏற்கனவே அமெரிக்க கடற்படையின் முற்றுகையால் ஈரானின் எண்ணெய் வர்த்தகம் முடங்கியிருக்கும் நிலையில், புதிய பொருளாதார தடைகள் ஈரான் பொருளாதாரத்திற்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என அஞ்சப்படுகிறது.



இந்த சூழலில் நேற்று கரன்சி சந்தையில் வர்த்தகம் தொடங்கிய போது, அமெரிக்க டாலருக்கு நிகரான ஈரான் ரியாலின் மதிப்பு 2.02 மில்லியன் டாலராக (சுமார் ரூ.17 கோடி) வரலாறு காணாத சரிவை எட்டியது. அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலையை ஈரான் மக்களால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 6 மாதத்திற்கு முன் போர் தொடங்கியதில் இருந்து அரிசியின் விலை 60 சதவீதமும், மாட்டிறைச்சியின் விலை 150 சதவீதமும் அதிகரித்துள்ளது.

இதற்கிடையே, மீண்டும் பேச்சுவார்த்தையை தொடங்கும் முயற்சியாக பாகிஸ்தான் முப்படை தலைமை தளபதி பீல்டு மார்ஷல் ஆசிம் முனீர் நேற்று ஈரான் சென்றார். டெஹ்ரானில் அவர் ஈரான் முக்கிய தலைவர்களை சந்தித்து பேசுகிறார். அவருடன் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மோசின் நக்வியும் உடன் சென்றுள்ளார்.




## புதுதில்லியில் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் 36-வது வருடாந்திர மாநாடு துவக்கம்

சென்னை, 26 ஆகஸ்ட் 2026: புது தில்லியில், வேளாண் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கான 36-வது வருடாந்திர மாநாட்டை, மத்திய வேளாண்மை, விவசாயிகள் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் இன்று தொடங்கி வைத்தார். "2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, வேளாண் உயர்கல்வியை மறுவடிவமைத்தல்" என்ற கருப்பொருளின் கீழ் 2026 ஆகஸ்ட் 25, 26 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், வேளாண் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுவின் (ஐசிஏஆர்) உயர்நிலை அதிகாரிகள், துணைத் தலைமை இயக்குநர்கள், கூடுதல் தலைமை இயக்குநர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் பங்கேற்று, எதிர்காலத்திற்கு ஏற்ற வேளாண் கல்வி முறையை உருவாக்குவதற்கான சீர்திருத்தங்கள் மற்றும் முன்னுரிமைகள் குறித்து விவாதிக்கின்றனர்.



துவக்க விழாவில், மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர்கள் திரு பகீரத் சௌத்ரி மற்றும் திரு ராம் நாத் தாக்கூர், வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையின் செயலாளரும் ஐசிஏஆர்-ன் தலைமை இயக்குநருமான டாக்டர் எம் எல் ஜாட் ஆகியோருடன், உயர்நிலை அதிகாரிகளும், முக்கியப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் உரையாற்றிய மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான், வேளாண் கல்வியின் வெற்றியை வழங்கப்படும் பட்டங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடக்கூடாது என்றும், மாறாக, அறிவு மற்றும் திறன்கள், விவசாயிகளின் வாழ்வில் கொண்டுவரப்படும் உறுதியான மாற்றம் ஆகியவற்றைக் கொண்டே அளவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். வேளாண் கல்வியை நடைமுறைக்கு உகந்ததாகவும், தொழில்நுட்பம் சார்ந்ததாகவும், விவசாயிகளின் தேவைகளுடன் பொருந்தக் கூடியதாகவும் மாற்றுவதற்கு ஏற்றவாறு அதை மறுவடிவமைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். வேளாண் பல்கலைக்கழகங்கள், ஐசிஏஆர், வேளாண் அறிவியல் மையங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில்துறை மற்றும் விவசாயிகள் இடையேயான வலுவான ஒத்துழைப்பின் மூலம், ஆராய்ச்சிகள், ஆய்வகங்களிலிருந்து வயல்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒவ்வொரு மாநாடும், உறுதியான முடிவுகளுக்கு வழிவகுத்து, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்காக ஒரு நவீன, மீள்திறன் கொண்ட மற்றும் வளமான வேளாண் துறையை உருவாக்குவதற்குப் பங்களிக்கும் வகையில், பல்கலைக்கழகங்கள் தெளிவான இலக்குகளை நிர்ணயித்து, செயல்படுத்தக்கூடிய செயல் திட்டங்களை உருவாக்கி, அதன் விளைவுகளை அளவிட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## பைல் திறப்பதாக பூச்சாண்டி காட்டி முதல்வர் மவுனம் காப்பது ஏன்? எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி

சென்னை, 26 ஆகஸ்ட் 2026: பைல் திறப்பதாக பூச்சாண்டிய காட்டி 72 மணி நேரம் ஆகியும் முதல்வர் மவுனம் காப்பது ஏன்? என்று எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பி உள்ளார். சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பாக பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

இரண்டு நாட்களுக்கு முன்பு முதலமைச்சரே சொல்கிறார், மூன்று பைல் தயாராக இருக்கின்றன, என் மேசைக்கே வந்து விட்டன, மேசையின் மேலேயே வைத்திருக்கிறேன், அதைத் திறக்க வைத்துவிடாதீர்கள் என்று திறங்கள், யார் உங்களை நிறுத்தியது? அதாவது மிரட்டுகிறாராம். அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சோபா கொடுத்தார் அல்லவா, அதுபோல பைல் என்று மறைமுகச் சொல் வைத்து முன்னாள் அமைச்சர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை மிரட்ட முயற்சிக்கிறாராம். கிட்டத்தட்ட 72 மணி நேரம் ஆகிவிட்டது. நான் கூட இந்த முதலமைச்சருக்குக் கொஞ்சமாவது சூடு, சொரணை இருக்கும் என்று நினைத்துக் கொண்டு இன்றைக்குச் சபைக்குச் சென்றுவிட்டேன். எங்கள் இல்லத்தில் ஒரு குடும்பத் திருமணம் முடித்து விட்டு 10 மணிக்கெல்லாம் சட்டமன்றத்திற்குச் சென்று விட்டேன்.

இன்றைக்கு முதல்வர் இந்தக் கோப்பைப் பற்றி வாய் திறப்பார், இல்லை திறந்து பார்த்தேன், ஏதாவது சொல்வார் என்று பார்த்தால் வாயையே திறக்கவில்லை. ஏனென்றால், அவர்களுக்குத் தெரியும், தி.மு.க மீது எந்தக் குற்றச்சாட்டையும் வைக்க முடியாது. பொய்க் குற்றச்சாட்டுகளை மட்டும் தான் வைக்க முடியுமே தவிர, எதையும் நிரூபிக்க முடியாது, நம் தலைவர் மீது எந்தக் குற்றமும் சுமத்த முடியாது. பூச்சாண்டி காட்டுகிறார்கள். அதுவும் நம்மிடம். இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், ரவிச்சந்திரன், மாவட்ட நிர்வாகிகள் ஏகப்பன், புனிதவதி, ஜி.எம். தேவன், ஆஷாத், மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, ஷேக் அப்துல்லா, வழக்கறிஞர் சந்துரு, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் ராஜசேகர், முரளி, ஐசிஎப் முரளி, வாசு, ஏ.பி. ஜெயின், டி.எஸ். பி.ராஜகோபால், நாகராஜ், சுதாகர், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, இப்ராஹிம் கனி, கலைச்செல்வி, போஸ், மாநகராட்சி நிலைக்குழு தலைவர் மருத்துவர் சாந்தகுமாரி, மண்டலக்குழு தலைவர்கள் பி.கே.மூர்த்தி, சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமுலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ‘வானவில்’ விஜய், எஸ்.எம்.ஜாவித். துணை அமைப்பாளர்கள் வினோத், ஜெகதீஷ், பாலமுருகன், தனசேகர், சங்கர் நானா, ராக்கி உசைன், வட்ட செயலாளர்கள் சதீஷ்குமார், பிரபாகர், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின், பரிமளம், மருத்துவர் பூர்ணிமா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
புதன்,
ஆகஸ்ட் 26, 2026

## உண்மையான கேரக்டரே இதுதான் முதல்வர் விஜய் அரசியலில் வில்லன்: டிடிவி தினகரன் கடும் தாக்கு



சென்னை, 26 ஆகஸ்ட் 2026: முதல்வர் விஜய் சினிமாவில் ஹீரோ, அரசியலில் வில்லன், அவரது உண்மையான கேரக்டரே இதுதான் என டிடிவி தினகரன் கடுமையாக தாக்கியுள்ளார். அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தஞ்சாவூரில் நேற்று அளித்த பேட்டி: முதல்வர் விஜய் கையில் 3 பைல் உள்ளது. ஆக்சன் எடுக்க வைத்து விடாதீர்கள் என மிரட்டுகிறார். ஒரு துறையில் ஊழல் நடந்து இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆட்சியாளருக்குதான் பொறுப்பே தவிர, சட்டசபையில் இது வரைக்கும் எந்த முதல்வரும் இப்படி மிரட்டுவதற்காக பயன் படுத்தியது கிடையாது. விஜய் சினிமாவில் ஹீரோவாக பார்க்கப் பட்டார். அரசியலில் வில்லனாக இருக்கிறார். டிவியில் அவரை பார்க்கும் போது ரகுவரன் ஸ்டைலில் வில்லனாக தெரிகிறார். அவருடைய உண்மையான கேரக்டர் அதுதான். ஹீரோவாக நடிக்கும் போது விருதுகளை பெறவில்லை. ஆனால், இப்போது அரசியல்வாதியாக சிறந்த வில்லன் நடிகராக பாரதரத்னா விருது கொடுக்கும் அளவுக்கு விஜய் நடந்து கொள்கிறார். சட்டசபையில் அமைச்சர்கள் எல்லாம், தலை, கால் புரியாமல் பேசுகிறார்கள். ஆதவ் அர்ஜுனா, திமுகவில் எம்பி சீட் கொடுக்கவில்லை என விசிகவுக்கு சென்றார். தற்போது, விஜய்யின் தீவிர ஆதரவாளராக காட்டி வருகிறார். அமைச்சர் நிர்மல் குமார், பல கட்சி பல்ராமன். லாட்டரி விழுந்த மாதிரி அமைச்சராகி விட்டு அந்த ஆச்சரியகுறிகளின் நடவடிக்கையை பார்க்கும் போது சிரிப்பு தான் வருகிறது.

திராவிட ஆட்சிகள் மீது எத்தனையோ குற்றச்சாட்டுகளை யார் சொல்லி இருந்தாலும், இந்தியாவில் ஒரு சிறந்த மாநிலமாக எல்லா துறைகளிலும் தமிழ்நாடு இருந்தது. தமிழகம் வளர்ந்து சென்றது. ஆனால், இன்றைக்கு எல்லா துறைகளிலும் பின்னடைவை நோக்கி செல்லுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. விஜய் தமிழ் படத்தில் தான் ஹீரோவாக நடித்தார். இங்கே தான் அந்த இன்ஸ்டா ஓடும். நார்த்தில் அந்த இன்ஸ்டா ஓடாது. முதலில் விஜய் சொன்னதை செய்யட்டும், தமிழக மக்களை ஏமாற்ற பார்க்கிறார்.

பாஜ ஆட்சிக்கு வந்துடும் என ஆச்சரிய குறிகளுக்கு ஆதரவு அளித்த கம்யூனிஸ்ட் சண்முகம், வீரபாண்டியன் எல்லாம் தவெக யார் என்று மக்களுக்கு தெரியப்படுத்துவார்கள். மாணிக்கம் தாகூரும் தவெகவுக்கு எதிராக பேசி வருகிறார். திருமாவளவனும் உணரும் காலம் வரும். தமிழகத்தில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை. ஹிட்லர் பாணியில் இந்த ஆட்சி போய் கொண்டு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### அதிமுகவினரை அழைத்துப்போய் நடுரோட்டில் நிறுத்திய செங்ஸ்

செங்கோட்டையன் என்பவரை அடையாளம் காட்டிய கட்சியை, யாரோ ஒரு சில பேர் மேல் உள்ள கோபத்தில் அந்த கட்சி அழிந்து விடும் என நினைக்கும் அளவுக்கு ஒரு வன்மம் பிடித்த மனிதராக இருக்கிறார். அமமுக, அதிமுகவை சேர்ந்தவர்களை எல்லாம் போன் போட்டு அழைத்து தவெகவில் கொண்டு போய் நடுரோட்டில் நிறுத்தியுள்ளார். அதிமுக அழிந்து விடும் என செங்கோட்டையன் பேசியது வன்மையாக கண்டிக்கத்தக்கது. அவர்தான் வீழ்ந்து போவார் என்று செங்கோட்டையன் கூறினார்.

## இந்தியா-நியூசிலாந்து உத்திசார் பாதுகாப்பு பேச்சுவார்த்தை வெலிங்டனில் நடைபெற்றது



சென்னை, 26 ஆகஸ்ட் 2026: இந்தியா - நியூசிலாந்து இடையேயான பாதுகாப்பு உத்திசார் உரையாடலின் இரண்டாவது பதிப்பு, நேற்று (2026 ஆகஸ்ட் 24) வெலிங்டனில் நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு அமிதாப் பிரசாத், நியூசிலாந்து பாதுகாப்பு அமைச்சகத்தின் துணைச் செயலாளர் திரு ரிச்சர்ட் ஷ்மிட் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இந்த உயர்மட்டப் பேச்சுவார்த்தை, கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதல், கூட்டு ராணுவப் பயிற்சி, ஒட்டுமொத்த பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவை குறித்து அமைந்திருந்தது.

கடந்த மாதம் நடைபெற்ற உச்சிமாநாட்டு நிலையிலான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட பகிரப்பட்ட ஒத்துழைப்பின் அடிப்படையில், ஒத்துழைப்பை அதிகரிக்க இரு தூதுக்குழுக்களும் விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டன. இந்தியா-நியூசிலாந்து உத்திசார் ஒத்துழைப்பு செயல்திட்டம் 2030-ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இலக்குகளைச் செயல்படுத்துவது குறித்தும் இதில் கவனம் செலுத்தப்பட்டது.

சுதந்திரமான, வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான தங்கள் உறுதிப்பாட்டை இரு நாடுகளும் மீண்டும் வலியுறுத்தின. கடல், வான், தரைப்படைப் பிரிவுகளில் கூட்டுப் பயிற்சிகள், பல்துறைப் பணியாளர் பரிமாற்றங்கள், பாதுகாப்புப் படை கல்லூரிகள் அளவில் ஒத்துழைப்பு ஆகியவை மூலம் இரு ராணுவங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகளைத் தூதுக்குழுக்கள் விரிவாக ஆய்வு செய்தன.

## தமிழக சட்டப்பேரவையில் எடப்பாடி பழனிச்சாமி-அமைச்சர் செங்கோட்டையன் மோதல்: கூச்சல், குழப்பம்



சென்னை 26, ஆகஸ்ட் 2026: தமிழக சட்டப்பேரவையில் அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்து விட்டு மாற்றுக் கட்சியில் சேர்ந்தது குறித்து எடப்பாடி பழனிச்சாமி மற்றும் செங்கோட்டையன் இடையே மோதல் ஏற்பட்டதால், அவையில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. தமிழக சட்டசபையில் இன்று மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் திமுக உறுப்பினர் ஆஸ்டின் பேசுகையில், பட்ஜெட் கூட்டத்தில் உதயநிதி பங்கேற்பதை தடுக்க சதி நடந்தது. சதியை முறியடித்து அவையில் வீற்றிருக்கிறார் உதயநிதி. சிறுபான்மை ஆணைய தலைவர் பெலிக்ஸ் ஜெரால்டு தொலைக்காட்சி அரசியல் விவாதங்களில் பங்கேற்கக் கூடாது" என்றார்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் நிர்மல்குமார் பேசுகையில், "சிறுபான்மை ஆணைய தலைவர் தனிப்பட்ட விவாதம். பொது மேடையில் பேசவே கூடாது என்றெல்லாம் கிடையாது. கடந்த ஆட்சியில் பீட்டர் அல்போன்ஸ், லியோனி போன்றவர்கள் அரசியல் விவாதங்களில் பேசி உள்ளனர்" என்றார். அப்போது எழுந்த அதிமுக உறுப்பினர் தளவாய் சுந்தரம், திமுக எம்எல்ஏ ஆஸ்டின் பல கட்சிகளில் இருந்தவர். இப்போது திமுகவில் இருக்கிறார் என்றார். இதற்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்து கடும் அமளியில் ஈடுபட்டனர்.

கே.என்.நேரு: எம்.எல்.ஏ. ஆஸ்டின் பேசியபோது அமைச்சர் பேசலாம், அவை முன்னவர் பேசலாம் தளவாய் சுந்தரம் ஏன் பேசுகிறார்?. இருவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கும் ஏதாவது இருக்கலாம். அதற்காக அவையில் வந்து பேசலாமா?. எப்படி அவருக்கு பேச அனுமதி கொடுக்கலாம். எந்த சம்பந்தமும் இல்லாமல் அவர் ஏன் பேசுகிறார்.

சபாநாயகர்: விளக்கம் கூற வருகிறார் என நினைத்து தான் தளவாய் சுந்தரம் பேச அனுமதித்தேன்.

ஆஸ்டின்( திமுக): ஒரு மாதத்தில் 6 பேர் ராஜினாமா செய்துள்ளனர். ஆதாயம் இன்றி ராஜினாமா செய்வார்களா? 6 தொகுதிகளில் எம்எல்ஏக்கள் இல்லாத நிலையில் மக்கள் தங்களது பிரச்சனைகளை யாரிடம் கூறுவது.

சபாநாயகர்: இடைத்தேர்தல் நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையம் தான் முடிவெடுக்க முடியும். நாம் முடிவு செய்ய முடியாது.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா: மக்கள் பிரச்சனைகளைக் கேட்டு நிறைவேற்றுவதற்காக 6 தொகுதிகளுக்கும் பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி: 6 தொகுதிகளின் எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்துள்ளதால் அந்த தொகுதி மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் உள்ளது. அந்த பகுதியில் உள்ள பொறுப்பு அமைச்சரால் தொகுதி பிரச்னையை முழுவதுமாக அறிந்துகொள்ள முடியாது என்பதால் தான் சட்டப்பேரவை உறுப்பினர் தேவை.

அவை முன்னவர் செங்கோட்டையன்: விரைவாக தேர்தல் நடத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆர்வம். அதில் மாற்றுக்கருத்து இல்லை. அதிலும் நாங்கள் வெற்றி பெறுவோம். அத்தனை பேரும் வெற்றி பெறுவார்கள். அதிலும் மாற்றுக்கருத்து இல்லை.

எடப்பாடி பழனிசாமி: விவாதம் வேறு மாதிரி போகுது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. வெற்றி பெற்ற பின் அந்த எம்எல்ஏ தங்களை சந்தித்து ஒரு மனு கொடுக்கிறார். இதன்பின் சட்டசபை நிகழ்ச்சியில் ஒருநாள் பங்கேற்றுவிட்டு பதவியை ராஜினாமா செய்த எம்எல்ஏ, மேல்மாடியில் உள்ள ஒரு கட்சியில் சேர்கிறார்.

சபாநாயகர்: நீங்கள் (எடப்பாடி பழனிச்சாமி) சொன்னதெல்லாம் வழக்கில் இருக்கிறது. அதை அவை குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

அப்போது, எடப்பாடி பழனிச்சாமி பேசும் போது மைக் அணைக்கப்பட்டதால் அதிமுக எம்எல்ஏக்கள் மைக் வழங்க வேண்டும் என்று எழுந்து நின்று வலியுறுத்தினர். இதற்கு பதிலடியாக தவெக எம்எல்ஏக்களும் கோஷம் எழுப்பினர். இதனால் அவையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

அவை முன்னவர் செங்கோட்டையன்: எடப்பாடி தொகுதியில் தவெக வேட்பாளர் வாபஸ் பெற்றது குதிரை பேரம் இல்லையா?

எடப்பாடி பழனிச்சாமி: அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ஒரு கட்சியில் இருந்து வெற்றி பெற்றுவிட்டு ராஜினாமா செய்து விட்டு ஏன் தவெகவில் சேர வேண்டும்?. அப்போது எடப்பாடி பழனிச்சாமி, "சத்தமாக பேசினார், உடனே பேரவைத் தலைவர் 'இது என்ன பொதுக் கூட்டமா? இங்கு என்ன பொதுக்கூட்டமா நடத்துகிறோம்?.

சபாநாயகர்: முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உணர்ச்சிவசப்படாமல் பேச வேண்டும். உங்கள் உடலை வருத்திக் கொள்ளக்கூடாது என்று சொல்கிறேன்.

இவ்வாறு காரசாரமாக விவாதம் நடந்தது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்